**பத்தாம் வகுப்பு – அரையாண்டுத்தேர்வு 2016– 17 அறிவியல்**

**விடைக்குறிப்பு**

பிரிவு –I

(மதிப்பெண்கள் : 15)

| சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக: | 15 X 1 = 15 |
|---|---|
| 1 | DNA – லிகேஸ் |
| 2 | BCG |
| 3 | நியூரான் |
| 4 | மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம் |
| 5 | $98.4^0F – 98.6^0F$ |
| 6 | எத்தனால் |
| 7 | கார்பெட் தேசிய பூங்கா |
| 8 | மீத்தேன் |
| 9 | சிதறலால் |
| 10 | 7 |
| 11 | Mg |
| 12 | கார்பன் |
| 13 | திரவ நைட்ரஜன் |
| 14 | ராண்ட்ஜன் |
| 15 | எந்திர ஆற்றல் |

பிரிவு – II

(மதிப்பெண்கள் : 40)

<table>
<tr><td colspan="3">குறிப்பு:– ஏதேனும் இருபது வினாக்களுக்கு விடையளிக்கவும்</td><td>20X 2 = 40</td></tr>
<tr><td>16.</td><td>மானோகுளோனல் எதிர்ப்புப் பொருள்கள்: (ஓரினச் செல் எதிர்ப்புப் பொருள்கள்)<br>புற்றுநோய்க்கு எதிராகப் பயன்படும் எதிர்ப்புப் பொருள்களாகும்.<br>ஹைபிரிட்டோமா தொழில்நுட்பம் மூலம் குளோன் செல்களால் உற்பத்திச் செய்யப்படுகின்றன.</td><td></td><td>2</td></tr>
<tr><td>17.</td><td>tt - அல்லீல்<br>இண்டர்பெரான்கள் – பாக்டீரியா எதிர்ப்பு புரதம்</td><td></td><td>2</td></tr>
<tr><td>18.</td><td>(i) கூற்று சரி<br>(ii) உடலுறுப்பு பயன்பாடு பற்ரய விதியை ஜீன் பாப்டைஸ் லாமார்க் கூறினார்</td><td></td><td>2</td></tr>
<tr><td>19.</td><td>எய்ட்ஸ் நோயை கண்டறியும் ஆய்வு :– எலைசா ஆய்வு<br>எய்ட்ஸ் நோயை உறுதிப்படுத்தும் ஆய்வு – வெஸ்டர்ன் பிளாட் ஆய்வு</td><td></td><td>2</td></tr>
<tr><td>20.</td><td>
</td><td></td><td>2</td></tr>
<tr><td>21.</td><td><table>
<tr><td>(அ) ஆட்டோகோரி 4</td><td>(i) பால்சம்</td></tr>
<tr><td>(ஆ) அனிமோகோரி 2</td><td>(ii) டிரைடாக்ஸ்</td></tr>
<tr><td>(இ) ஹைட்ரோகோரி 1</td><td>(iii) தாமரை</td></tr>
<tr><td>(ஈ) சூகோரி 3</td><td>(iv) ஸாந்தியம்</td></tr>
</table></td><td></td><td>2</td></tr>
<tr><td>22.</td><td colspan="2"><table>
<tr><td>கழிவு நீக்க உறுப்பு</td><td>வெளியேற்றும் கழிவு</td><td>கழிவுப்பொருட்கள்</td></tr>
<tr><td>சிறுநீரகம்</td><td>சிறுநீர்</td><td>யூரியா, யூரிக் அமிலம், கிரியாட்டினின் போன்ற முக்கிய நைட்ரஜன் கழிவுகள்</td></tr>
<tr><td>நுரையீரல்</td><td>வெளியேற்றப்படும் காற்று</td><td>கார்பன் டைஆக்ஸைடு, நீர் ஆவியாதல்</td></tr>
<tr><td>தோல்</td><td>வியர்வை</td><td>அதிகமான நீர் மற்றும் உப்புகள்</td></tr>
</table></td><td>2</td></tr>
<tr><td>23.</td><td>ஊ) சிறுநீரகம், இரத்தத்தின் வேதியியைபு சம நிலையைப் பேணுகிறது.</td><td></td><td>2</td></tr>
<tr><td>24.</td><td>அ) கார்டியாக் ஆ)சிஸ்டோல் இ) டையஸ்டோல் ஈ) 72</td><td></td><td>2</td></tr>
<tr><td>25.</td><td>$C_6H_{12}O_6 + O_2$</td><td></td><td>2</td></tr>
<tr><td>26.</td><td>ஹ – ல் காணப்படும் இயக்கம் – நேர் ஈர்ப்புச் சார்பு இயக்கம் (புவிசார்பு இயக்கம்)<br>க்ஷ – ல் காணப்படும் இயக்கம் – எதிர் ஈர்ப்புச் சார்பு இயக்கம் ( ஒளித்திசைசார்பு இயக்கம்)</td><td></td><td>2</td></tr>
</table>

<table>
<tr><td>27.</td><td>
<table>
<tr><td>தற்சார்பு ஊட்ட முறை</td><td>பச்சையம்</td><td>ஹைபிஸ்கஸ்</td></tr>
<tr><td>ஒட்டுண்ணிகள்</td><td>ஹாஸ்டோரியங்கள்</td><td>கஸ்குட்டா</td></tr>
<tr><td>மட்குண்ணிகள்</td><td>மைக்கோரைசா வேர்கள்</td><td>மானோட்ரோபா</td></tr>
</table>
</td><td></td><td>2</td></tr>
<tr><td>28.</td><td>(A) வும் (R) ம் சரி (R) , (A) க்கான சரியான விளக்கம்</td><td></td><td>2</td></tr>
<tr><td>29.</td><td>அ) பெட்ரோலியம்.<br>ஆ) சொறிசிரங்கு</td><td></td><td>2</td></tr>
<tr><td>30.</td><td>மரபுசார் வளங்கள் : கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு<br>மரபுசாரா வளங்கள் : சூரிய ஆற்றல், ஹைட்ரஜன், காற்று</td><td></td><td>2</td></tr>
<tr><td>31.</td><td>90 சதவிகிதத்திற்கும் அதிகமான மீத்தேன் , சிறிதளவு ஈத்தேன் , புரோப்பேன்</td><td></td><td>2</td></tr>
<tr><td>32.</td><td>(i) முகவை A – ல் உள்ள கரைசல் ப்ரௌனியன் இயக்கத்தைப்பெற்றுள்ளது<br>(ii) முகவை B – ல் உள்ள கரைசல் துகள் உருவளவு 2000 Å க்கு மேல் பெற்றுள்ளது</td><td></td><td>2</td></tr>
<tr><td>33.</td><td>

$$\text{கரைபொருளின் நிறை சதவீதம்} = \frac{\text{கரைபொருளின் நிறை}}{\text{கரைபொருளின் நிறை} + \text{கரைப்பானின் நிறை}} \times 100$$

$$= \frac{10}{10+40} \times 100$$

கரைபொருளின் நிறை சதவீதம் = 20 %.
</td><td></td><td>2</td></tr>
<tr><td>34.</td><td>
<table>
<tr><th>அணு</th><th>அணுக்கட்டு எண்</th></tr>
<tr><td>அ) குளோரின்</td><td>2</td></tr>
<tr><td>ஆ) நியான்</td><td>1</td></tr>
<tr><td>இ) பாஸ்பரஸ்</td><td>5</td></tr>
<tr><td>ஈ) ஓசோன்</td><td>3</td></tr>
</table>
</td><td></td><td>2</td></tr>
<tr><td>35.</td><td>அ) வினிகர்<br>ஆ) இரத்தம், சலவை சோடா, வீட்டுபயன்பாட்டு அம்மோனியா</td><td></td><td>2</td></tr>
<tr><td>36.</td><td>

$p^H = -\log_{10}(H^+)$

$= -\log_{10}(10^{-3})$

$= 3\log_{10}(10)$

$p^H = 3$
</td><td></td><td>2</td></tr>
<tr><td>37.</td><td>(i) இலேசானது, வலிமையானது அரிப்பைத்தடுப்பது.</td><td></td><td>2</td></tr>
<tr><td>38.</td><td>(i) Ag-Sn இரசக்கலவை பற்குழிகளை அடைக்கப்பயன்படுகிறது.<br>(ii) சிலைகள், நாணயங்கள்,கோவில் மணிகள் தயாரிக்க வெண்கலம் பயன்படுகிறது.</td><td></td><td>2</td></tr>
<tr><td>39.</td><td>வைரத்தில் உள்ள ஒவ்வொரு கார்பன் அணுவும் மற்ற நான்கு கார்பன் அணுக்களுடன் நான்முகி அமைப்பில் பிணைப்புற்றுக் கடின முப்பரிமாண அமைப்பை உருவாக்குகின்றது. இதுவே வைரத்தின் கடினத்தன்மைக்காரணமாகும்.</td><td></td><td>2</td></tr>
<tr><td>40.</td><td>நியூட்டனின் மூன்றாம் விதி<br>உந்தம் அழிவின்மை விதி</td><td></td><td>2</td></tr>
<tr><td>41.</td><td>நேர்க்குறி<br>எதிர்க்குறி</td><td></td><td>2</td></tr>
<tr><td>42.</td><td>அ) அம்மீட்டர்<br>ஆ) மரபு சாரா ஆற்றல்</td><td></td><td>2</td></tr>
<tr><td>43.</td><td>
<table>
<tr><th>உறுப்புகள்</th><th>குறியீடு</th></tr>
<tr><td>மின்கலம்</td><td></td></tr>
<tr><td>சாவி(திறந்தது)</td><td></td></tr>
<tr><td>மின்தடை</td><td></td></tr>
<tr><td>வோல்ட் மீட்டர்</td><td></td></tr>
</table>
</td><td></td><td>2</td></tr>
<tr><td>44.</td><td>

$$\text{பக்க இணைப்பில் தொகுபயன் மின் தடை} = \frac{1}{R_1} + \frac{1}{R_2} + \frac{1}{R_3}$$

$$= \frac{1}{5} + \frac{1}{10} + \frac{1}{15}$$

$$= \frac{10}{30} = \frac{1}{3}$$

தொகுபயன் மின் தடை = 3 ஓம்
</td><td></td><td></td></tr>
<tr><td>45.</td><td>காந்தவிசைக்கோடுகள் ஒன்றையொன்று வெட்டுமானால் வெட்டும் புள்ளியில் அவை இரு திசைகளைக்கொண்டிருக்க வேண்டும். ஆனால் காந்தவிசைக்கோடுகள் எப்போதும் வட முனையில் தொடங்கி தென் முனையில் முடியும்.</td><td></td><td>2</td></tr>
<tr><td>46.</td><td>அ) மின்காந்தம்<br>ஆ) டயாப்டர்</td><td></td><td></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 47. | விளக்கம்:–<br>குழியாடியின் குவியத்தின் வழியே செல்லும் ஒளிக்கதிர் எதிரொளிப்புக்குப் பின், முதன்மை அச்சுக்கு இணையாகச் செல்லும்.<br><br> | | |

| பிரிவு –III<br>(மதிப்பெண்கள்: 20) | | | | |
|---|---|---|---|---|
| 48. | அ) | **மலேரியா ஒட்டுண்ணியின் வாழ்க்கைச்சுழற்சி:–**<br>**பிளாஸ்மோடியம்:–**<br>• பிளாஸ்மோடியத்தின்பால் இனப்பெருக்கம் அனாபிலஸ் பெண் கொசுவிலும், பாலிலாஇனப்பெருக்கம்மனிதனிலும் நடைபெறுகிறது.<br>• நோயுற்றமனிதரைஅனாபிலிஸ் பெண் கொசுகடிக்கும்பொழுது பிளாஸ்மோடியம் கொசுவின் உடலுக்குள் சென்றுபாலினப்பெருக்கத்தினால் பெருகி ஸ்போரோசுவாய்டுகளாக உருவாகிக் கொசுவின் உமிழ்நீர் சுரப்பியில் சேமிக்கப்படுகிறது.<br>• இப்பெண் கொசுநோயற்ற மனிதனைக் கடிக்கும்போது இந்தஸ்போரோசுவாய்டுகள் மனித உடலில்நுழைந்து கல்லீரல் செல்களில் பெருகிப் பின்னர் இரத்தச் சிவப்பணுக்களைத்தாக்கி வெடிக்கச் செய்கிறது.<br>• இதன் காரணமாக "ஹீமோசோயின்" என்னும் நச்சுப்பொருள் வெளிப்பட்டுக் குளிரையும்,<br>• கடும் காய்ச்சலையும் ஏற்படுத்துகிறது. இக்காய்ச்சல் 3 முதல் 4 நாள்கள் நீடிக்கலாம்.<br> | | 5 |
| 49. | | <br><br>செல் உடலம்:<br>நரம்புகளின் செல் உடலம்,ஒழுங்கற்ற வடிவம் அல்லது பன்முகச் சீரமைவற்ற அமைப்பு ஆகும்.<br>நரம்புசெல் (அ) நரம்பு செல்லின்உடலம் சைட்டான் எனவும் அழைக்கப் பெறும்.<br>செல் உடலத்தில் சைட்டோபிளாசம், நிசில்துகள்கள், செல் நுண்ணுறுப்புகள் போன்றவைகாணப்படுகிறது.<br>நிசில் துகள் என்பவைபுரதச்சேர்க்கைக்கான ரிபோசோம்களைக் கொண்டவை<br>டெண்டிரைட்டுகள்:<br>செல் உடலத்திலிருந்துவெளிப்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும், அடுத்தடுத்துக் கிளைத்தலுக்குள்ளான குட்டை இழைகளே டெண்டிரைட்டுகள் அல்லது டெண்டிரான் ஆகும்.<br>டெண்டிரைட்டுகள் செல் உடலை நோக்கி மின்தூண்டல்களைக் கடத்துகின்றன.<br>ஆக்ஸான்:<br>செல் உடலத்திலிருந்து உருவாகும் இழைகளில் ஒன்று மிக நீண்டு காணப்படும். முடிவில் இது கிளைத்துக் காணப்படும்.<br>இஃதுஆக்ஸான் என அழைக்கப்படும். ஆக்ஸான் பின்முனைக் கிளைத்த, குமிழ் போன்ற அமைப்பில் முடிகின்றது. இவை நரம்புச் செல் இடைவெளிக் குமிழ்கள் என அழைக்கப்படும். இவை நரம்புக் கடத்தும் பொருள் அல்லது நரம்பு சமிங்ஞைகளை கடத்தும் பொருள் என்ற வேதிப்பொருளால் நிரப்பப்பட்டுள்ளன.<br>ஆக்ஸானிலுள்ள சைட்டோபிளாசத்திற்கு ஆக்ஸோபிளாசம் என்று பெயர்.<br>ஆக்ஸானைச் சூழ்ந்துள்ள மையலின் என்ற உறையானது பலஅடுக்குகளைக் கொண்ட ஸ்வான் செல்களால் ஆனது. இதன் வெளி அடுக்கிற்கு நியூரிலெம்மா என்று பெயர்.<br>ஆக்ஸானின் கிளைத்த முடிவுப் பகுதிகளைத் தவிர, மற்ற பகுதிகளை நியூரிலெம்மா போர்த்தியபடி உள்ளது. ஆக்ஸானின்மீது மையலின் உறையால் உண்டாக்கப்படும் இடைவெளிகள், 'ரேன்வியரின் கணுக்கள்' எனப்படும்.<br>நியூரிலெம்மா ரேன்வியர் கணுக்களில் தொடர்ச்சியற்று காணப்படுகிறது. மின்தூண்டல் விரைவாகக் கடத்துவதை மையலின் உறை உறுதி செய்கிறது. | | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 50. | | அ) மகரந்தச்சேர்க்கை:–<br>மகரந்தப் பையிலிருந்து மகரந்தத் தூள்கள் சூலக முடியைச் சென்றடையும் செயலே மகரந்தச் சேர்க்கை என்று பெயர்.<br>ஆ) வகைகள்:–<br>தன் மகரந்தச்சேர்க்கை.<br>அயல் மகரந்தச்சேர்க்கை.<br>இ) நன்மை தரக்கூடிய மகரந்தச்சேர்க்கை:–<br>அயல் மகரந்தச்சேர்க்கை நன்மை தரக்கூடியது<br>காரணம்:–<br>1.அயல் மகரந்தச் சேர்க்கையின் விளைவாக உருவாகும் விதைகள், முளைத்துத் திடமான தாவரங்களாக வளரும் தன்மையைப் பெற்றிருக்கும். அதாவது அயல் மகரந்தச் சேர்க்கையின் மூலம் புதிய வகைகள் உருவாகும்.<br>2. நன்கு முளைக்கும் திறனுடைய விதைகள் உருவாகும். | | 5 |
| 51. | | இச்சூழல் உடல் நலத்திற்கு ஏற்றதல்ல.<br>1. புகையில் உள்ள கரி மாசுத்துகள்கள் சுவசாதில் கலந்து விடும்<br>2. புகையில் உள்ள அதிகப்படியான சுவாசித்தலைப்பாதிக்கும்.<br>3. புகையால் மாசடையும் நீர் உடல் நலத்தைப்பாதிக்கும்.<br>4. புகையால் உருவாகும் அமில மழை உடல் நலத்தைக்கெடுக்கும்.<br>5. புகையால் வளிமண்டலம் பாதிக்கப்பட்டு சுவாச மண்டல கோளாறுகள் உண்டாகும். | | 5 |
| 53. | | அ) கழிவுப்பாகு<br>ஆ) அம்மோனியம் சல்பேட் அல்லது அம்மோனியம் பாஸ்பேட்<br>இ) இன்வர்டேஸ்<br>ஈ) எரி சாராயம்<br>உ) தனி ஆல்கஹால் | | 5 |
| 54. | | சந்திராயனின் சாதனைகள்:–<br>• நிலவின் மண்ணில் நீர் மூலக்கூறுகள் அதிகப் பரப்பில் பரவியிருப்பதைக் கண்டறிந்தது.<br>• சந்திராயனின் கனிம வரை கருவி(Moon minerology Mapper), நிலவு முற்காலத்தில் முற்றிலும் உருகிய நிலையிலிருந்ததை உறுதி செய்கிறது.<br>• ஐரோப்பிய விண்வெளி மையத்தின் பயன்சுமை – சந்திராயன் 1 படமாக்கும் X-கதிர் (CIXS - Chandrayan 1 Imaging X-Ray Spectrometer) நிறமாலைமானி, 24க்கும் மேற்பட்ட வலிமை குன்றிய சூரிய ஒளிப்புயல்களைப் பதிவு செய்தது.<br>• சந்திராயன் I-இல் பொருத்தப்பட்ட நில வரைபட ஒளிப்படக்கருவி, அமெரிக்காவின் அப்போலோ 15, அப்போலோ 11 நிலவுக்கலன்கள் நிலவில் தரையிறங்கிய இடங்களைப் பதிவு செய்துள்ளது.<br>• நிலவின் கனிம வளம் பற்றிய தகவல்கள் உயர் பகுதிறன் நிறமாலைமானி மூலம் பெறப்பட்டன._நிலவின் லேசர் தொலைவறியும் கருவி (LLRI– Lunar Laser Ranging Instrument) நிலவின் துருவங்கள் மற்றும் முக்கியப் பகுதிகள் பற்றிய தகவல்களை அளித்தது.<br>• CIXS X-கதிர் படக்கருவி, நிலவில் அலுமினியம், மெக்னீசியம், சிலிக்கான் இவற்றின் தடயங்களைப் பதிவு செய்துள்ளது.<br>• பல்கேரியன் பயன்சுமையான கதிர்வீச்சுக் கண்காணிப்புக் கருவி (Radiation Dose Monitor - RADOM) சந்திராயன் ஏவப்பட்ட நாளிலேயே செயல்படுத்தப்பட்டு இறுதிநாள் வரை செயல்பட்டது.<br>• 75 நாள்களில் சந்திராயன் புகைப்படக் கருவி 40,000க்கும் மேற்பட்ட படங்களைப் புவிக்கு அனுப்பியது._நிலவின் மேடுபள்ளங்களை நில வரைபட ஒளிப்படக்கருவி பதிவு செய்தது. நிலப்பரப்பு அதிக நிலக்குழிகளைக் கொண்டது.<br>• புவியின் முழு வடிவத்தையும் முதன்முறையாகப் பதிவு செய்து அனுப்பியது.<br>• சந்திராயன் I நிலவுப் பரப்பில் மனிதர்களின் உறைவிடமாகப் பயன்படும் பல குகைகளைக் கண்டறிந்தது. | | 5 |
| | | m)<br><br><br>இ) மாறு திசை மின்னியற்றி ( ஹஊ மின்னியற்றி)<br>ஈ) மின்காந்தத்தூண்டல் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது. | | 5 |

**ஏதேனும் தவறுகள் இருப்பின் பாடப்புத்தத்தில் உறுதி செய்து கொள்ளவும்**

எஸ்.இளமுருகன், எம்.எஸ்.சி.,பி.எட்., எம்.ஃபில் பட்டதாரி ஆசிரியர், அ மே நி பள்ளி, பெரியாம்பட்டி தருமபுரி மாவட்டம் – 635 205. கைப்பேசி எண்:– 9750080976.